**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை**
**கிருஷ்ணகிரி மாவட்டம்**
முன்னிலை: திரு. ஜி. அமர் ஆனந்த்., B.A.LL.B (Hons)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2022–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
**இ.ம.எண். 4/21 இன் அ.வ.எண். 51/2020**
TNKI13-000083-2020

1. ஆதிமூலம்
2. மாசிலா
3. பச்சையப்பன் ... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

/எதிராக/

1. பழனியம்மாள்
2. கணேசன்
3. சின்னகண்ணி
4. சம்பத்
5. கஸ்தூரி
6. கலா ...எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

இம்மானுவானது 17.08.2022 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் இறுதி விசாரணைக்கு, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.வடிவேல் மற்றும் எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் கே.முருகன், அவர்களின் முன்னிலையில் வந்திருந்து, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நாள்வரை ஆய்வில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும் :

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ஒத்தி வைக்க கோரி 1908–ம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச்சட்டத்தின் கட்டளை IX விதி 7 மற்றும் பிரிவு 151 ன் கீழும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் கூற்றுகளின் சுருக்கம்:** மனுவின் பிரமாணதாரர் மேற்படி வழக்கில் 3 ம் பிரதிவாதி ஆவார் என்றும், இவ்வழக்கானது மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர தடை உத்தரவு

பரிகாரங்கள் கோரி தொடுக்கப்பட்டுள்ள வழக்காகும். மேற்படி வழக்கு கடந்த 16.02.2021-ம் தேதியில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அவர்களின் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி நடவடிக்கைகள் போடப்பட்டிருந்த நிலையில் ஊர் பெரியவர்கள் வைத்து சமரசம் பேசி கொள்ளலாம் என்று எதிர்மனுதாரர்கள் கூறியிருந்தார்கள் என்றும், பின்பு உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலும், COVID-19 தொற்று பரிசோதனைக்காக மனுதாரர்கள் சென்றிருந்ததாலும் தங்களது வழக்கறிஞரிடம் வழக்கைப்பற்றி தகவல் தெரிவிக்காத நிலை ஏற்பட்டது என்றும், அதனால் உரிய நேரத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், நீதிமன்றத்தில் முன்னிலை ஆகாததாலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவு ஒத்திவைக்க கோரப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள் கூற்றுகளின் சுருக்கம்:** மனுதாரர்களின் மனு பொய் சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் சட்டப்படியும் நியாயபடியும் செல்லத்தக்கது அல்ல என்றும், மனுதாரர்கள் சமரசம் பேசிக்கொள்ளலாம் என்று கூறியுள்ளதும், பின்பு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அனைவரும் COVID-19 தொற்று பரிசோதனைக்காக மனுதாரர்கள் சென்றிருந்தார்கள் என்றும், அதனால் நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் எனவும், தவறானவை என்றும் மறுத்துள்ளனர். எதிர்மனுதாரர்கள் கூறுவது யாதெனில் மனுதாரர்களுக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பல தேதிகள் வழங்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலேயே 22.02.2021 தேதியில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பு 01.03.2021-ம் தேதியில் வழக்கு விசாரிக்கப்பட்டும், மற்றும் 08.03.2021

முதல் 02.07.2021 வரை தீர்ப்பாணைக்காக நடவடிக்கைகள் போடப்பட்டுள்ள நிலையில் 20.07.2021–ம் தேதியில் மனுதாரர்கள் காலம் கடத்தி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால், இம்மனு செலவுத்தொகையுடனும், நஷ்டஈடு தொகையுடனும் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளனர்.

**3.** இம்மனுவில் இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் தீர்வு காணவேண்டிய பிரச்சினையாக கருதுவது என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**4.** இம்மனுவில் இருதரப்பிலும் எந்தவொரு சாட்சியமும், சான்றாவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5.** விவாதம்: இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலிக்கப்பட்டபோது, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் 09.11.2020–ம் தேதியில் வழக்கறிஞரின் மூலம் முன்னிலையாகியும் பின்பு 08.12.2020, 08.01.2021, 05.02.2021 தேதிகள் வரை எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்புகள் அளிக்கப்பட்டு இருந்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக 09.02.2021–ம் தேதி வழக்கை ஒருதலைபட்சமாக விசாரிக்க உத்தரவு பிறப்பிக்கபட்டது என்று தெரியவருகிறது. மேலும் 16.02.2021, 22.02.2021 தேதிகளில் ஒருதலைப்பட்சமாக சாட்சி விசாரணை செய்யப்பட்டு 08.03.2021–ம் தேதியில் இருந்து வாதியின் வாய்மொழி வாதங்களுக்காக நடவடிக்கைகள் போடப்பட்டுள்ளது என்றும் மேற்படி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இம்மனுவினை 20.07.2021–ம் தேதியில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தெரியவருகிறது. மனுதாரர்கள் இம்மனுவினை அனுமதிக்க கூறும் காரணிகள் யாதெனில், தங்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்ட தேதிகளில், சமரசம் பேசி கொள்ளலாம் என்று பேசப்பட்டு இருந்தது என்றும் பின்பு தங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் COVID–19 தொற்று பரிசோதனைக்காக மனுதாரர்கள் சென்றிருந்ததாலும் தங்களது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விவரங்களை தெரிவிக்க முடியாத காரணத்தினாலும்

நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறுகின்றனர். 2021-ம் ஆண்டின் கால சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கும் போது மனுதாரர்களின் உடல்நிலை பற்றிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிர்மனுதாரர்கள் ஆட்சேபணை யாதெனில் 08.03.2021-தேதியில் இருந்து 02.07.2021-ம் தேதிவரை தீர்ப்பாணைக்காக போடப்பட்டுள்ளது என்றும் இம்மனுவினை காலம் தாழ்த்தி வழக்கு நடவடிக்கைகளை தாமதப்படுத்த வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரியுள்ளனர். வழக்கு கோப்புகளை பரிசீலிக்கும்போது 08.03.2021-ம் தேதியிலிருந்து 02.07.2021-ம் தேதிவரை வாதிகளின் / எதிர்மனுதாரர்களின் வாதங்களுக்காகவே நடவடிக்கைகள் போடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. அதனால் எதிர்மனுதாரர்களின் இந்த ஆட்சேபணை நிலைக்கத்தக்கது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், வழக்கில் அனைத்து தரப்பினரும் முன்னிலையாகி நடத்தும் பட்சத்தில் தான் வழக்கில் உள்ள அனைத்து பிரச்சனைகளையும் முழுமையான தீர்வு எட்ட முடியும் என்றும், இருதரப்பையும் கேட்பதே இயற்கை நியதி என்றும் இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மனு அனுமதிக்கதக்கது என்று முடிவு காண்கிறது. எனினும் எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஏற்பட்டுள்ள காலவிரையத்தையும், பொருட்செலவையும் கருத்திற்கொண்டு இம்மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் விழைகிறது.

6. இறுதியில் இம்மனுவானது செலவுத்தொதையுடன் அனுமதிக்கப்படுகிறது. 16.09.2022-ம் தேதிக்குள் ரூ. 200/-ஐ செலவுத்தொகையாக மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கும் மற்றும் ரூ. 200/-ஐ மாவட்ட சட்ட பணிகள் ஆணையத்திற்கு செலுத்தும் பட்சத்தில் அனுமதிக்கப்பட்ட உத்தரவு நிலைநிறுத்தப்படும் என்றும், செலுத்த தவறும் பட்சத்தில் மனுவானது தன்னிச்சையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும்

உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. நிபந்தனையின் நிறைவேற்றுகையை பார்க்க 16.09.2022–ம் தேதி மீண்டும் அழைக்கப்பெறும்.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2022–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30–ஆம் தேதி என்னால் நீதிமன்றத்தின் திறந்த அவையில் பகரப்பட்டது.

Sd/– XXXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஊத்தங்கரை

இணைப்பு:

மனுதாரர் தரப்பு சாட்சி: இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை

Sd/– XXXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஊத்தங்கரை